**காலி மரபுரிமை மன்றம்- 2020**

**01. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

காலி மரபுரிமை மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

காலி மரபுரிமை மன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளமை.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாண இலக்கம் 756 | பொருட் கணிப்பீட்டுச் சபையொன்று நியமிக்கப்பட்டு வருடாந்த பொருட் கணிப்பீடொன்றைச் செய்ய வேண்டிய போதிலும், அதற்கு இணங்க பொருட் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக விரைவில் வருடாந்த பொருட் கணிப்பீடொன்று மேற்கொள்வதற்கான கோரிக்கை நேரடி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த பொருட் கணிப்பீட்டை செய்வதாற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்றச் சட்டத்தின் II ஆவது பகுதியின் 12(I) ஆம் பந்தி | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மன்றத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதியமொன்று அமைக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மன்றத்தின் நோக்கங்களுக்கான பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 55,286 ஆன மிகை என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 3,956,108 ஆகும். முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,900,822 அதாவது நூற்றுக்கு 98.6 வீதமான பின்னடைவொன்றைக் காட்டியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலிக் கோட்டையில் உள்ள சந்திர காவற் கோபுரத்தில் | விரைவில் திறக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செலவிடப்பட்ட தொகை குறிப்பிட்ட |

| | | | |
|---|---|---|---|
| | அமைந்துள்ள பழைய டச்சு போர் அறையைப் பாதுகாத்து காலியின் வரலாற்றுப் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் கண்காட்சி காட்சியகமாக மாற்றுவதற்காக 2020 திசெம்பர் 31 வரையில் ரூபா 11,760,121 ஆனது செலவிடப்பட்டிருந்த போதிலும், அச் சந்திர காவற் கோபுரம் கண்காட்சிக் காட்சியகமாக மாற்றப்பட்டிருக்கவில்லை. | | பணிக்காக பயன்படுத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காலி மரபுரிமை மன்றத்திற்குத் தேவையான அதிகாரங்களைப் பெறுவதற்கும் மற்றும் மன்றத்திற்கான வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்றச் சட்டம் திருத்தப்பட வேண்டியதன் அவசியம் இனங்காணப்பட்டு அதற்காக 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் குறிப்பிட்ட திருத்தமொன்று மேற்கொள்ளப்படவில்லை. | சட்டத்தைத் திருத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு காலி மரபுரிமை மன்றத்தினால் தெற்கு அபிவிருத்தி அமைச்சிலிருந்து பெறப்பட்டிருந்த குறிப்பிட்ட ஆவணங்கள், வீடுகள், நிர்மணங்கள் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டம் திருத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தெரு விளக்குகளைப் பொருத்துவதற்கான முதலாம் கட்டத்திற்காக ரூபா 1,784,544 உம், இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 2,395,266 உம் மன்றத்தினால் செலவிடப்பட்டு நகர சபைக்கு ஒப்படைத்திருந்த போதிலும், செலவிடப்பட்ட ரூபா 4,179,810 ஆன | இப்பழைய விளக்குகள் நீண்ட காலமாக செயற்படாமல் காணப்பட்டமை உலக மரபுரிமையான காலிக் கோட்டையில் வாழும் சமூகத்திற்கு, காலி கோட்டைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கடினமான சூழ்நிலையொன்று ஏற்பட்டுள்ளதால் காலி மரபுரிமை மன்றத்தின் நிர்வாகச் | மின்சாரத்திற்காக அன்றி தெரு விளக்குகளுக்கான செலவுகளைத் திருப்பிச் செலுத்துவதற்கு மின்சார சபையின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை கணக்காய்வுத் தினமாகிய 2021 திசெம்பர் 16 வரையில் மின்சக்தி நிறுவகத்தினால் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | சபையின் அங்கீகாரத்தின் கீழ் காலி மரபுரிமை மன்றத்தின் மூலதன செயற்திட்டமாக அப்பழைய விளக்குகள் திருத்தப்பட்டு பராமரிப்பிற்காக காலி மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பழைய விளக்கு அமைப்பு இலங்கை மின்சார தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமானது அல்ல என்பதால் அதற்கான செலவைத் திருப்பிச் செலுத்தல் தேவையற்றது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும் வீதி மின்சாரம் இலங்கையில் இலவசமாக வழங்கப்படுகின்ற சேவை என்பதுடன் அதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை என்பதையும் குறிப்பிடுகின்றேன். | |
| (ஈ) | 2020 சனவரி 01 இல் மன்றத்தின் களஞ்சியசாலையில் ரூபா 698,497 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களின் இருப்பு காணப்பட்டதுடன் வருடத்தில் தேவையைக் கருத்திற் கொள்ளாது ரூபா 275,000 பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதனால் 2020 திசெம்பர் 31 வரையில் ரூபா 954,634 ஆன இருப்பு களஞ்சியசாலையில் விளைவற்றதாகக் காணப்பட்டது. | ரூபா 14,390 ஆன வருமானம் புத்தகங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் ஆகிய இரு விடயங்களினதும் உள்ளடக்கம் என்பதும் அத்துடன் வருடத்தில் கொள்வனவுகள் ரூபா 275,000 இற்கு மேற்கொள்ளப்பட்டு 1000 Hertitage of the walled city தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை.<br><br>மொத்த விற்பனை நடவடிக்கைகளில் ரூபா 4,474 ஆன நட்டமொன்று ஏற்பட்டமைக்கு பெறுமதி கூடிய புத்தகங்கள் சிலவற்றை உத்தியோகபூர்வ நன்கொடையாக வெளியிடப்பட்டிருந்தமை காரணமாக இருந்தது.<br><br>வருட இறுதி இருப்புப் பெறுமதி ரூபா 954,634 ஆன மிகுதியொன்று காணப்படுவது நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமையினால் ஆகும். | இருப்புக்களை வைக்கும் போது நாட்டில் நிலவிய கொவிட் 19 ஆபத்து நிலைமை மற்றும் பணப் புழக்கம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு அதிகபட்ச செயற்பாட்டு மூலதன இருப்பை உருவாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) ரூபா 7,126,837 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கபா மலசலகூட முறைமை மற்றும் தேவாலய வீதி, மலசல கூட முறைமை வருமான மீட்டுவதற்காக உடன்படிக்கையின்றி மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதனால் மன்றத்திற்கு கிடைக்கவிருந்த வருமானம் தவற விடப்பட்டிருந்தது. | காலிக் கோட்டைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மலசல கூடத் தேவை அதிகரித்து வருவதால் பாலதக்ஷ மாவத்தையில் இருந்த பழைய மலசலகூட அமைப்பு அகற்றப்பட்டு காலிக் கோட்டைக்கு ஏற்ற வகையில் பழைய கபா மலசலகூட முறைமை நவீன மலசல கூட முறைமையாக அபிவிருத்தி செய்யப்பட்டு அதன் பராமரிப்பிற்காக காலி மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டது. | கோட்டையில் வருமானம் பெறக் கூடிய சாத்தியம் உள்ளதால் வருமான மீட்டுவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |
| (ஊ) காலி மரபுரிமை மன்றக் கட்டளையின் கட்டுப்பாட்டிலுள்ள தேவாலய வீதியில் பொலிஸ் உத்தியோகபூர்வ விடுதிகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்த கட்டிடத்தின் பின்புறத்தில் அமைந்துள்ள மலசலகூட முறைமை ரூபா 1,966,306 செலவிடப்பட்டு புனரமைக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமாகிய 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி வரையில் அம்மலசலகூட முறைமை பூட்டி மூடப்பட்டிருந்தது. | தேவாலய வீதியின் பழைய பொலிஸ் உத்தியோகபூர்வ விடுதிக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகபூர்வ விடுதியின் உரிமையாளர்கள் பயன்படுத்திய மலசலகூட முறைமையும் திருத்தியமைக்கப்பட்டதன் பின்னர் பராமரிப்பிற்காக காலி மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.<br><br>எதிர்காலத்தில் இச்சொத்து எமது சொத்துக்கள் பதிவேட்டில் நீக்கப்பட்டு காலி மாநகர சபையின் சொத்துக்களில் உள்ளடக்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு இறுதி முடிவொன்றுக்கு வரப்படும். | கோட்டையில் வருமானம் பெறக் கூடிய சாத்தியம் உள்ளதால் வருமான மீட்டுவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான நிறைவேற்று அதிகாரி, நிர்வாக உத்தியோகத்தர் போன்ற பதவிகள், 02 செயற்திட்ட உதவியாளர் பதவிகள் மற்றும் 02 பாதுகாப்பு மேற்பார்வையாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை | வெற்றிடங்கள் காணப்படுகின்ற 02 செயற்திட்ட உதவியாளர்களுக்காக 2021.04.08 இலிருந்து அமைச்சினால் அபிவிருத்தி உதவியாளர் இருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் கைவிடப்பட்டிருந்தது, நிர்வாக | வெற்றிடங்கள் முறையாக நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் பதவியில் ''கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில்'' இந்த அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் சிரேஷ்ட அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு மேற்பார்வையாளர் பதவிகள் 02 இற்காகவும் ஆட்சேர்ப்பு செய்யப்பட முடியும். பிரதான நிறைவேற்று அதிகாரி / பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் திருத்தப்பட வேண்டும். |